# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**14313**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.</u>

முன்னிலை: முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு M.முரளி,
எண்.2/10B, டாக்டர் அம்பேத்கார் நகர்,
அம்மையப்பன் அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம்.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர்,
திருமருகல் அரசினர் மேல்நிலைப் பள்ளி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

*****

மனுதாரர் திரு M.முரளி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு B.திருமாவளவன், தலைமையாசிரியர், திருமருகல் அரசினர் மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம் மாவட்டம் இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 08.12.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்களிடம் நாகை மாவட்டம், திருமருகல் அரசினர் மேல்நிலைப் பள்ளியைப் பற்றி 5 இனங்களில் தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். மனுதாரர் ரூ.2350/– செலுத்தித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தகவல் தெரிவித்ததால் காசோலை மூலம் தொகை 11.02.2009 அன்று செலுத்தப்பட்டுள்ளது. சில தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. தகவல்கள் முழுமையாக இல்லாததால் 20.06.2009

அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது சில தகவல்கள் அளிக்கப்பட்டதாகக் கூறினார். ஆனால் 2005–2006–ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கிய கல்வி உதவித் தொகை குறித்த மாணவர்கள் பட்டியல் தேவையென்று மனுதாரர் கூறிய காரணத்தால், இவ்வாணை பெறப்பட்ட 10 நாட்களுக்குள் மனுதாரர் கேட்ட மாணவர் பட்டியலையம், பணம் பட்டுவாடா (acquittance register) விவரத்தையும் மனுதாரருக்கு அளிக்க வேண்டுமெனவும், ரூ.2350/–க்குள் இருந்தால் மீதித் தொகையை மனுதாரருக்குத் திருப்பி அளிக்க வேண்டுமெனவும், அதிகப்படியானால் மனுதாரர் பக்கத்திற்கு ரூ.2/– விதம் செலுத்த வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.14313/விசாரணை/2009**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
திருமருகல் அரசினர் மேல்நிலைப் பள்ளி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

திரு M.முரளி,
எண்.2/10B, டாக்டர் அம்பேத்கார் நகர்,
அம்மையப்பன் அஞ்சல்,
திருவாரூர் மாவட்டம்.

*"ptl"*